**කොළඹ විශ්ව විද්‍යාලය**
**නීති පීඨය**
**නීතිවේදී උපාධි පරීක්ෂණය (මාර්ගගත - online), තෙවන වසර - 2020**
**සාක්ෂි හා නඩු විධාන නීතිය**
**(පැ තුනයි)**

මුළු ප්‍රශ්ණ සංඛ්‍යාව: 06
ඕනෑම ප්‍රශ්ණ **<u>තුනකට</u>** පමණක් පිළිතුරු සපයන්න.
(අපැහැදිලි අත්අකුරු වලට ලකුණු අඩු කෙරේ)

---

1) යොෂාන් සමඟ විවාහ ගිවිස ගෙන සිටි නර්මදා දින 2 ක් අතුරුදහන්ව සිටි අතර 2020 ජනවාරි 7 වන දින නර්මදාගේ මෘත දේහය හබරණ, ඇයගේ සේවා ස්ථානයට ආසන්නව පිහිටි ජලාශයක තිබී සොයා ගැනිනි. පැඟී ගිය පැලැටි පඳුරු, පා සටහන් සහ වාහනයක ටයර් සටහන්ද අපරාධය සිදුවූ ස්ථානය අසලින් පොලිසිය විසින් සොයා ගෙන තිබිණි. නර්මදා රැකියා කරන ස්ථානයේ අයවලුවන් විසින් ඇයව අවසන් වරට දැක තිබුනේ ජනවාරි 5 වන දින ඇය සමඟ අනියම් සබඳතාවයක් පවත්වමින් සිටි බවට පවසන ෂවීන් යන අයගේ මෝටර් රථයට ඇය නගින අවස්ථාවේදීය. නර්මදාගේ රැකියා ස්ථානයේ සේවකයෙකු වන කවීෂ් පවසන ආකාරයට ජනවාරි 2 වන දින යොෂාන් නර්මදාට තර්ජනය කරමින් මෙසේ ප්‍රකාශ කර ඇත: "උඹ ෂවීන්ව හම්බ වෙන එක නැවැත්තුවේ නැතිනම් මම උඹව ඉවර කරල, මාවත් ඉවරයක් කර ගන්නව". ජනවාරි 11 වන දින මාතර පිහිටි යොෂාන්ගේ නිවසට පොලිසිය පැමිණෙන විට, යොෂාන් පොලිස් අත් අඩංගුවෙන් බේරීමට පලායාමට උත්සාහ කළ බවක් කියැවේ. යොෂාන් පවසන ආකාරයට ඔහු ජනවාරි 4 දින සිට දින 8 දින දක්වා මත්තල ගුවන් තොටුපලේ රැකියාවේ නිරතව සිට ඇත. කවීෂ් පවසන ආකාරයට මෙයට පෙර ද ජලාශයේ ගිලී දිවිනසා ගැනීමට නර්මදා උත්සාහ කොට ඇත.

නර්මදාගේ මරණය සිදුකිරීම සම්බන්ධයෙන් යොෂාන් අධිචෝදනා ලබයිනම් ඔහුව වරදට හසු කරන හෝ නිර්දෝෂී කරන සාක්ෂි ලෙස කුමණ කරුණු ඉදිරිපත් කළ හැකිද? 1895 අංක 14 දරන සාක්ෂි ආඥා (සංශෝධිත) පනතේ ප්‍රතිපාදන සහ තීන්දු වූ නඩු යොදා ගනිමින් ඔබගේ පිළිතුර ඉදිරිපත් කරන්න.

2) පොලිස් ස්ථානයක බෝම්බයක් ඇටවීමට කුමන්ත්‍රණය කිරීම යන චෝදනා මත 1978 අංක 48 දරණ ත්‍රස්තවාදය වැළැක්වීමේ පනත යටතේ රිචඩ්ව අත්අඩංගුවට ගෙන ඇත. මිනීමරුමක් සිදුකිරීමේ චෝදනාවට හොසේ යන අයව අත්අඩංගුවට ගෙන ඇත. රිචඩ් සහ හොසේ යන දෙදෙනාවම පූජක මැතිව් පියතුමා සිටින සිරමැදිරියේ රඳවනු ලැබිණි. තමාගේ මැදිරියේ රැඳිවියන් දෙදෙනා සමඟ කුළුපග වීමෙන් පසු මැතිව් පියතුමා ඔවුන්ට මෙසේ පවසා ඇති බැව් කියැවේ: "දැන්ම පශ්චාත්තාපී වී පාපෝච්ඡාරණයක් කොට ඔබලාගේ සදාතන නිදහස සොයා ගන්න". ඉන් අනතුරුව රිචඩ් සහ හොසේ යන දෙදෙනාම තමන් විසින් කළ බවට චෝදනා ලැබූ වරදවල් සම්බන්ධයෙන් මැතිව් පියතුමාහට පාපෝච්ඡාරණය කොට ඇත. එදිනම රිචඩ් සහ හොසේ, පොලිස් අධිකාරී ඇන්තනී යන අය වෙත ඉදිරිපත් කොට ඇති

අතර, රිචඩ් සහ හොසේ යන දෙදෙනාම තමන් විසින් මැතිව් පියතුමාට පැවසූ දෙයම පොලිස් අධිකාරිවරයාට ද පවසා ඇත. හොසේ විසින් කරන ලද ප්‍රකාශයේ ප්‍රතිඵලයක් ලෙස මිනීමැරීමට භාවිතා කළේ යැයි පවසන ආයුධය පොලිසිය විසින් සොයා ගන්නා ලදී. දින දෙකකට පසුව රිචඩ් සහ හොසේ යන දෙදෙනාම මහේස්ත්‍රාත්වරයා ඉදිරියට පමුණුවණු ලදුව, මහේස්ත්‍රාත්වරයා විසින් වෙන වෙනම ප්‍රකාශ දෙකක් දෙදෙනාගෙන්ම ලබා ගන්නා ලදී.

ශ්‍රී ලංකාවේ අදාල  ව්‍යවස්ථාපිත නීතිය සහ නඩු තීන්දු සඳහන් කරමින් රිචඩ් සහ හොසේ යන දෙදෙනාට එරෙහිව ඉහත සඳහන් කරන ලද සාක්ෂි වල ආවේශ්‍යතාවය (admissibility) සාකච්ඡා කරන්න.

3)

A. තමා වාසය කළ නිවසේ සිටියදී බරපතල පිළිස්සුම් තුවාල ලබා සිටි නිර්මලාව, ඇයගේ අසල්වැසියෙකු වන සුභාෂිණීට හමුවේ. එම නිවසේ නිර්මලා වාසය කළේ තම සැමියා වූ සුරේෂ්, තම නැන්දනිය වූ කමලා සහ සුරේෂ්ගේ බාල සොයුරු කුමාර් යන අය සමඟය. සිදුවූයේ කුමක්දැයි සුභාෂිණී ඇසූ විට, ‘උන් හදන්නෙ මාව මරන්න’ යි පැවසූ නිර්මලා සිහි විසඥවිය. එම නිවසේ අන් කිසිවෙකුත් පෙනෙන්නට නොසිටි නිසා, අසල්වැසියන් කිහිප දෙනෙකුගේ සහාය ඇතිව, සුභාෂිණී නිර්මලාව රෝහලට රැගෙන ගියාය. රෝහලේ දී නැවත සිහිය ලත් නිර්මලා, තම සහෝදරිය වන සුලෝචනාට පැවසූයේ, ‘උන් මට ගිනි තිබ්බා’ යනුවෙනි. නිර්මලාගේ ප්‍රකාශය අසා සිටි සුලෝචනා නිර්මලාට මෙසේ උපදෙස් දුන්නාය: ‘සිද්ධවුනේ අනතුරක් කියල දොස්තරලට කියන්න. එහෙම නොකිව්වොත් ඒ අය අපට කියයි ඔයාව මහ ඉස්පිරිතාලෙට ගෙනියන්න කියල. ඒක හරිම දුරක්නෙ’. පසුව නිරන්ජන් නම් වෛද්‍යවරයාට නිර්මලා පැවසුවේ, ‘මම ලිප පත්තු කරමින් හිටියේ. මගෙ ඇඳුමට ගිනි ඇවිලුනා’ යනුවෙනි. පසුදින ෂාමලී නම් කාන්තා පොලිස් නිලධාරිණිය නිර්මලාට සම්මුඛ වූ අවස්ථාවේ නිර්මලා මෙසේ පවසා සිටියාය: ‘කුමාර් මාව බිමට තල්ලු කරා. අර යක්ෂ ගෑනි මගෙ ඇඟට තෙල් වත්කරා. සුරේෂ් මට ගිනි තිබ්බා’.

සුරේෂ්, කුමාර් සහ කමලා යන අයට එරෙහි මිනීමැරුම් චෝදනා වලදී නිර්මලාගේ ප්‍රකාශ භාවිතා කළ හැකිද?  1895 අංක 14 දරන සාක්ෂි ආඥා (සංශෝධිත) පනතේ ප්‍රතිපාදන සහ තීන්දු වූ නඩු යොදා ගනිමින් ඔබගේ පිළිතුර ඉදිරිපත් කරන්න.

B. “පූර්ව නිගමනයක් යන්න සාක්ෂියක් නොවන නමුත්, එය යම් පාර්ශවයකට වාසි සහගතව පවතින විට එයින් එම පාර්ශවයට බැලූ බැල්මට නඩුකරයක් (*prima facie* case) ලබාදීම පමණක් සිදුකරන හෙයින්, එම පාර්ශවය මුල් ඔප්පු කිරීමේ භාරයෙන් නිදහස් කරයි.”

1895 අංක 14 දරන සාක්ෂි ආඥා (සංශෝධිත) පනත යටතේ මෙම සංකල්පය ක්‍රියාත්මක වන ආකාරය කෙටියෙන් සාකච්ඡා කරන්න.  තීන්දු වූ නඩු සමඟ ඔබගේ පිළිතුර ඉදිරිපත් කරන්න.

4)

A. “තමන්ගේ චරිතය, ‘කරුණක් ලෙස ඉදිරිපත් කරන’ චූදිතයෙකු තමන්ගේ සමස්ථ අතීත ක්‍රියාකලාපයම ඉදිරිපත් කළා සේ සැළකේ. චූදිතයෙකුට තමන්ගේ යහපත් ක්‍රියාකලාපය ප්‍රකාශ කිරීමේදී ඔහුගේ යහපත් චරිතය සම්බන්ධ අයැදීම් නිෂ්ප්‍රභා වන ඔහුගේ අනෙකුත් අතීත චර්යා පිළිබඳව ඔහුව පරීක්ෂාවකට ලක්වීමකින් වැළකී සිටිය නොහැකිය” - *Stirland v. Director of Public Prosecutions* ([1944] 2 AII ER 13).

අදාල ව්‍යවස්ථාපිත නීතිය සහ විනිශ්චිත නඩු තීන්දු සඳහන් කරමින් චරිතය සම්බන්ධ සාක්ෂි ශ්‍රී ලංකාවේ අපරාධ නඩුවලදී ආවේශ්‍ය (admissibility) වන ආකාරය කෙටියෙන් සාකච්ඡා කරන්න.

B. “අධිකරණය විසින් එබැවින් විශේෂඥවරයාට ඔහුගේ මතය විස්තර කිරීමට කැඳවීමක් කරනු ලැබිය යුතු අතර, පසුව එම විශේෂඥවරයාගේ මතයෙන් අධිකරණයට සෑහීමකට පත්විය හැකිද/නොහැකිද යන්න සම්බන්ධයෙන් අධිකරණයේ මතයක් ඇතිකරගත යුතුය. අධිකරණය තමන්ගේ මතය විශේෂඥවරයාගේ මතයට යටත් නොකළ යුතුය”.

ඉහත ප්‍රකාශය ඇසුරින් ශ්‍රී ලංකාවේ අධිකරණමය කටයුතුවල විශේෂඥ මතවල සාක්ෂිමය වටිනාකම සාකච්ඡා කරන්න.

5) 1997 අංක 30 දරණ ඇප පනත නීතිගත කිරීමේ ප්‍රතිඵලයක් ලෙස, යම් පරීක්ෂණයකට හෝ නඩු විභාගයකට මුහුණ දී සිටින්නෙකුට ඇප ලබාදීම සම්බන්ධයෙන් විනිශ්චයකාරවරුන් සතුව තිබූ අභිමතය අඩු වී ඇති බවක් පිළිබඳ නිරීක්ෂණයකර තිබේ. මෙම නිරීක්ෂණයට බලපෑමක් වී තිබෙන කාරණය නම්, 1979 අංක 15 දරණ අපරාධ නඩු විධාන සංග්‍රහය (සංශෝධිත) පනතේ සහ ඇප පනතේ අදාල ප්‍රතිපාදන නිසි ආකාරයෙන් උපයෝගී කරගැනීම සම්බන්ධයෙන් අභියාචනා අධිකරණ විසින් ඉදිරිපත් කරනු ලැබූ පරස්පර අදහස්ය.

ඔබ මීට එකඟද? විනිශ්චිත නඩු තීරණ සමඟ ඔබගේ පිළිතුරට හේතු දක්වන්න.

6) පහත **<u>A</u>** හෝ **<u>B</u>** යන ප්‍රශ්ණ දෙකෙන් එකකට පමණක් පිළිතුරු දෙන්න.

A. ගමන් කරමින් තිබූ මෝටර් රථයක සිට වෙඩි තබා කමල් යන අයව මරණයට පත්කිරීම සම්බන්ධයෙන් සුනිල් චෝදනා ලැබීය. මෙසේ චෝදනා කෙරුන මිනීමැරීම සිදු වූ වහාම පරීක්ෂණ සිදුකළ පොලිස් නිලධාරියාට සුනිල් යන අයව වරදට හසුකරමින්, මෙම අපරාධය සියැසින් දුටු සාක්ෂිකාරියක වන රාණි යන අය වාචික ප්‍රකාශයක් ලබා දුන් අතර, ඒ අනුව සුනිල් යන අයව අත්අඩංගුවට ගැනිණි. පසුව රාණි අභිචෝදක පාර්ශවයේ ප්‍රධාන සාක්ෂිකාරියක් වූවාය. නඩු විභාගයේදී සාක්ෂි දෙමින් පොලිස් නිලධාරියා කියා සිටියේ රාණි විසින් තමන් වෙත ලබා දුන් ප්‍රකාශය මත තමා කටයුතු කළ බවයි.

නඩු විභාගය සිදුකළ විනිශ්චයකාරවරයා ජූරියට මගපෙන්වමින් වක්‍රාකාරව කියා සිටියේ පරීක්ෂණ සිදුකළ පොලිස් නිලධාරියාගේ සාක්ෂිය අනුසන්ධනය කරන

සාක්ෂියක් ලෙස රාණිගේ ප්‍රකාශය සළකන ලෙසටය. ජූරිය විසින් චූදිත වරදකරු කරමින් තීන්දුව ලබා දුන් අතර සුනිල් මිනීමැරීමට වරද කරු කරන ලදී.

නඩු විභාගය කළ විනිශ්චයකාරවරයා විසින් අපරාධ විමර්ශණයට අදාල 1979 අංක 15 දරණ අපරාධ නඩු විධාන සංග්‍රහය (සංශෝධිත) පනතේ ප්‍රතිපාදන වැරදි ලෙස උපයෝගී කර ගැනීම මත අභියායචනයක් ගොනු කිරීමට සුනිල්ට අවශ්‍යව ඇත.

තීන්දු වූ නඩු යොදාගනිමින් සුනිල්ට උපදෙස් ලබා දෙන්න.

**නැතහොත්**

B. "හුදු අවිධිමත් (irregularity) බවක් නිසා යුක්තියේ අවගමනයක් (miscarriage of justice) වීමට හෝ නොවීමට ඉඩ ඇත. එසේ නමුදු චෝදනාවක් කොහෙත්ම නොතිබීම වැනි මූලික දෝෂයක් (fundamental defect) වෙනස් ලෙසකින් සළකා බැලිය යුතු අතර, සාධාරණ වූ ප්‍රතිපත්තිමය කාරණා සළකා බලන කළ, එවන් මූලික දෝෂයක් නිසා අනිවන වැරදි නඩු විභාගයකින් (mistrial) යුක්තියේ අවගමනයක් සිදුවූවායයි සළකනු ලැබේ " – *Jayaratne Banda v. Attorney-General* ([1997] 3 SLLR 211).

චෝදනා ගොනුකිරීම සම්බන්ධයෙන් වන, 1979 අංක 15 දරණ අපරාධ නඩු විධාන සංග්‍රහය (සංශෝධිත) පනතේ ප්‍රතිපාදන සළකා බලමින් ඉහත ප්‍රකාශය සාකච්ඡා කරන්න. ඔබගේ පිළිතුර තීන්දු වූ නඩු සමඟ ඉදිරිපත් කරන්න.

**கொழும்புப் பல்கலைக்கழகம், இலங்கை**

**சட்ட பீடம்**

**சட்டமாணிப் பரீட்சை, ஆண்டு III (இணையம் மூலமானது) – 2020**

**சான்று மற்றும் நடபடிமுறைச் சட்டம்**

(மூன்று மணித்தியாலம்)

வினாக்களின் மொத்த எண்ணிக்கை: **06**

எவையேனும் **மூன்று** வினாக்களுக்கு **மட்டும்** விடையளிக்க.

(தெளிவற்ற கையெழுத்துக்குப் புள்ளிகள் குறைக்கப்படும்.)

---

01. யொஷான் என்பவனுக்கு நிச்சியிக்கப்பட்டிருந்தவளான நர்மதா என்பவள் இரண்டு நாட்களாகக் காணாமற் போயிருந்தாள் என்பதுடன், ஹபரன பிரதேசத்திலுள்ள அவளது வேலைத்தளத்திற்கு அருகாமையிலுள்ள ஏரியொன்றிலிருந்து 7 ஜனவரி 2020 அன்று அவளது சடலம் கண்டுபிடிக்கப்பட்டது. குற்றம் நடந்த இடத்திற்கு அருகே மிதிக்கப்பட்ட புதர்கள், கால்த்தடங்கள் மற்றும் வாகனமொன்றின் சக்கரத்தின் அடையாளங்கள் என்பவற்றைப் பொலிஸார் கண்டுபிடித்தனர். நர்மதாவினைக் கடைசியாக அவளது சகாக்கள் 5 ஜனவரி அன்று, அவள் உறவொன்றில் இருந்ததாகக் கூறப்படும் ஷவேன் என்பவனின் வாகனத்தில் ஏறிய போது பார்த்திருந்தனர். நர்மதாவின் சகாவான கவேஷ் என்பவனின் கூற்றுப்படி, 2 ஜனவரி அன்று, 'நீ ஷவேனைப் பார்ப்பதை நிறுத்தவில்லை என்றால் நான் உன்னையும் தீர்த்துக் கட்டி என்னையும் முடித்து விடுவேன்' எனக் கூறி யொஷான், நர்மதாவினை மிரட்டியுள்ளான். 11 ஜனவரி அன்று மாத்தறைப் பிரதேசத்திலுள்ள யொஷானின் வீட்டிற்குப் பொலிஸார் வந்தபோது, கைது செய்யப்படுவதைத் தவிர்ப்பதற்காக யொஷான் தப்பி ஓட முயன்றதாகக் கூறப்படுகிறது. யொஷானின் கூற்றுப்படி, 4 முதல் 8 ஜனவரி வரையிலான காலப்பகுதியில் அவன் மத்தள விமான நிலையத்தில் கடைமையாற்றிக் கொண்டிருந்தான். கவேஷின் கூற்றுப்படி, நர்மதா முன்னொரு தடவை தன்னைத்தானே குறித்த ஏரியில் மூழ்கடித்துத் தற்கொலை செய்ய முயன்றுள்ளாள்.

    நர்மதாவின் கொலைக்கு யொஷான் குற்றஞ்சாட்டப்பட வேண்டியிருப்பின், என்ன நிகழ்வுகள் இயைபுடையனவையாக (inculpating) அல்லது பொறுப்பிலிருந்து தவிர்ப்பதற்குப் பயன்படக்கூடிய (exculpating) சான்றாகக் கருதப்பட முடியும்? உமது விடையினை 1895 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க (திருத்தப்பட்டவாறான) சான்றுக் கட்டளைச் சட்டத்தின் பொருத்தமான ஏற்பாடுகள் மற்றும் தீர்க்கப்பட்ட வழக்குகள் மூலம் ஆதாரப்படுத்துக.

02. ரிச்சர்ட் என்பவன் பொலிஸ் நிலையம் ஒன்றில் குண்டு வைப்பதற்கு சதித் திட்டம் தீட்டியமைக்காக 1978 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளான். ஜோஸ் என்பவன் கொலைக் குற்றமொன்றிற்காகக் கைது செய்ப்பட்டுள்ளான். ரிச்சர்ட் மற்றும் ஜோஸ் ஆகிய இருவரும் மதகுரு மத்யூ என்பவரைச் சிறையில் தடுத்து வைத்திருந்ததான அறைக்கு மாற்றப்பட்டனர். இரண்டு கைதிகளுடனும் அறிமுகமானதைத் தொடர்ந்து, 'இப்போதே மனந் திருந்துவதுடன் உங்கள் நித்திய சுதந்திரத்தைக் கண்டுபிடிக்கும் பொருட்டு குற்றத்தை ஒப்புக்கொள்ளுங்கள்' என்று மதகுரு மத்யூ கூறியிருந்தார். அதனைத் தொடர்ந்து, ரிச்சர்ட் மற்றும் ஜோஸ் ஆகிய இருவரும் தாம் புரிந்ததாகக் கூறப்படுவதான குற்றங்களை மதகுரு மத்யூவிடம் ஒப்புக்கொண்டனர். அதே தினத்தில் ரிச்சர்ட், ஜோஸ் ஆகிய இருவரும் பொலிஸ் அத்தியட்சகரொருவரான அன்டனி என்பரிடம் கூட்டிச் செல்லப்பட்ட போது, மதகுரு மத்யூவிடம் கூறியதையே ரிச்சர்ட்டும் ஜோஸும் மீண்டும் கூறினர். ஜோஸினுடைய கூற்றின் விளைவாக, கொலைக்கான ஆயுதமாகப் பயன்படுத்தப்பட்டதெனக் கருதப்படும் துப்பாக்கியொன்றினை பொலிஸார் கண்டுபிடித்தனர். இரண்டு நாட்களின் பின்னர், ரிச்சர்ட்டும் ஜோஸும் நீதவான் முன்னிலையில் ஆஜராக்கப்பட்டனர் என்பதுடன் நீதவான் இரண்டு தனித்தனியான கூற்றுக்களைப் பதிவுசெய்தார்.

பொருத்தமான தீர்ப்புச் சட்டம் மற்றும் இலங்கையின் நியதிச் சட்டம் என்பவற்றின் பின்னணியில், ரிச்சர்ட் மற்றும் ஜோஸ் ஆகியோருக்கு எதிரான மேற்குறிப்பிட்ட சான்றுகளின் ஏற்புடைமை தொடர்பில் ஆராய்க.

03. (அ) நிர்மலா என்பவள் அவளது கணவனான சுரேஷ், மாமியார் கமலா மற்றும் சுரேஷினுடைய இளைய சகோதரனான குமார் ஆகியோருடன் வசித்துவந்ததான வீட்டில், கடுமையான தீக் காயங்களுடன் காணப்பட்டதை அவளுடைய அயலவளான சுபாஷினி என்பவள் கண்டாள். என்ன நடந்தது என சுபாஷினி கேட்ட போது, 'அவர்கள் என்னைக் கொலை செய்வதற்கு முயற்சித்தனர்' என நிர்மலா பதிலளித்தாள் என்பதுடன் பின்னர் அவள் சுயநினைவிழந்தாள். வீட்டில் வேறு எவரையும் காணவில்லை என்பதனால், பல அயலவர்களின் உதவியுடன் சுபாஷினி நிர்மலாவை வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றாள். வைத்தியசாலையில் நிர்மலா சுயநினைவுக்குத் திரும்பினாள் என்பதுடன், 'அவர்கள் எனக்குத் தீ வைத்தனர்' என அவளது சகோதரியான சுலோச்சனா என்பவளிடம் கூறினாள். அதைக் கேட்டு சுலோச்சனா, 'இது ஓர் விபத்து என வைத்தியர்களிடம் சொல். இல்லையென்றால் உன்னைப் பெரிய வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லும்படி அவர்கள் எங்களிடம் கேட்பார்கள். அது மிகவும் தூரத்திலுள்ளது' என நிர்மலாவிற்கு ஆலோசனை வழங்கினாள். பின்னர் நிர்மலா, 'நான் அடுப்பில் தீ மூட்டிக்

கொண்டிருந்தேன். எனது ஆடையில் தீ பற்றியது' என வைத்தியர் நிரஞ்சன் என்பவரிடம் கூறினாள். அடுத்த நாள், நிர்மலாவை நேர்காணல் செய்த ஓர் பெண் பொலிஸ் அதிகாரியான ஷர்மலீ என்பவளிடம் நிர்மலா, 'குமார் என்னை நிலத்தில் தள்ளினான். ஆத் தீய பெண் என் மீது எண்ணையை ஊற்றினாள். சுரேஷ் என் மீது தீ மூட்டினான்' எனப் பதிலளித்தாள். பல மணித்தியாலங்களுக்கு பின்னர் நிர்மலா மரணமடைந்தாள்.

சுரேஷ், குமார் மற்றும் கமலா ஆகியோருக்கு எதிரான கொலைக் குற்றச்சாட்டுகளில் நிர்மலாவினுடைய கூற்றுக்கள் பயன்படுத்தப்பட முடியுமா? 1895 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க (திருத்தப்பட்டவாறான) சான்றுக் கட்டளைச் சட்டத்தின் பொருத்தமான ஏற்பாடுகள் மற்றும் தீர்க்கப்பட்ட வழக்குகள் மூலம் உமது விடையினை ஆதாரப்படுத்துக.

(ஆ) ஓர் ஊகமானது தன்னளவிலேயே சான்றல்லவாயினும் யாருக்கு சார்பாக அது காணப்படுகின்றதோ அவரது சார்பில் முகத்தோற்ற அளவிலான வழக்கொன்றை உருவாக்குகிறது; ஆகவே இது ஆரம்ப எண்பிக்கும் சுமையை இலகுவாக்குகிறது.

1895 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க (திருத்தப்பட்டவாறான) சான்றுக் கட்டளைச் சட்டத்தின் கீழ் இக் கோட்பாடு எவ்வாறு செயற்படுகிறது என்பதனை சுருக்கமாக ஆராய்க. உமது விடையினை தீர்க்கப்பட்ட வழக்குகளால் ஆதாரப்படுத்துக.

04. (அ) " 'தனது குணாதிசயத்தைப் பிணக்கில் முற்போடுகின்ற' குற்றஞ்சாட்டப்பட்ட ஒருவர் அவரது கடந்தகாலப் பதிவுகள் முழுவதையும் பிணக்கில் முற்போடுவதாகக் கருதப்பட வேண்டும். அவர் தனது நல்ல நடத்தையைக் குறிப்பிட்ட விடயங்களில் முற்போட்டுவிட்டு தனது ஏனைய தகவல்களை விசாரணைக்கு வெளிப்படுத்தாது விட்டுவிடுவாராயின், நற்குணாதிசயத்திற்கான கோரிக்கையை நிரூபிக்கத் தவறும் வகையில் அது அமையுமாகையால் அவர் அவ்விதம் செயற்படக் கூடாது." - *Stirland v. Director of Public Prosecutions* ([1944] 2 AII ER 13).

பொருத்தமான தீர்க்கப்பட்ட வழக்குகள் மற்றும் நியதிச் சட்டம் என்பவற்றின் உதவியுடன் இலங்கையில் குற்றவியல் வழக்குகளுடன் தொடர்புடைய குணவியல்பு சான்றினுடைய ஏற்புடைமை தொடர்பில் சுருக்கமாக ஆராய்க.

(ஆ) "எனவே, நீதிமன்றமானது, நிபுணரின் கருத்துக்கான காரணங்களை விளக்குவதற்கு அவரை அழைக்க வேண்டும் என்பதுடன் அதன் பின்னர் நிபுணருடைய கருத்து திருப்திகரமானதா இல்லையா என்பது தொடர்பான தனது சொந்தக் கருத்தினை

உருவாக்க வேண்டும். நீதிமன்றமானது தனது சொந்தக் கருத்தினை நிபுணரின் கருத்திற்கு கீழ்ப்படிய வைக்கக் கூடாது.''

மேற்போந்த கூற்றின் பின்னணியில், இலங்கையின் நீதிமுறைச் செயன்முறையில் நிபுணத்துவச் சான்றின் சான்றியல் பெறுமதியினை ஆராய்க.

05. 1997 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க பிணைச் சட்டத்தினை ஏற்றுக்கொண்டமையானது, ஓர் புலன்விசாரணை அல்லது விசாரணையினை எதிர்கொள்கின்ற எவரேனும் ஆளுக்கு பிணை வழங்குவதில் நீதிபதிகளுக்கு காணப்பட்ட தற்றுணிபு அதிகாரத்தை வினைத்திறனாகக் குறைத்துள்ளதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. இவ் அவதானமானது, 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க (திருத்தப்பட்டவாறான) குற்றவியல் நடபடிமுறைக் கோவைச் சட்டம் மற்றும் பிணைச் சட்டம் ஆகியவற்றின் பொருத்தமான ஏற்பாடுகளின் முறையான ஏற்புடைமை தொடர்பில் மேல்முறையீட்டு நீதிமன்றங்களால் வெளிப்படுத்தப்பட்ட முரண்பாடான கருத்துக்களினால் செல்வாக்குச் செலுத்தப்பட்டுள்ளது.

நீர் உடன்படுகின்றீரா? உமது விடைக்கான காரணங்களைத் தருவதுடன் அதனை தீர்ப்புச் சட்ட அதிகாரத்தினால் ஆதாரப்படுத்துக.

06. **(அ) அல்லது (ஆ)** பகுதிக்கு விடையளிக்க:

**(அ)** குற்றஞ்சாட்டப்பட்டவனான சுனில் என்பவன் தான் பயணித்துக் கொண்டிருந்த நகர்ந்து கொண்டிருக்கும் காரொன்றிலிருந்து கமல் என்பவனை சுட்டுக் கொலை செய்தமைக்கு குற்றஞ்சாட்டப்பட்டான். குற்றத்தைக் கண்ணால் கண்ட சாட்சியான ராணி என்பவள், புரியப்பட்டதான கொலையினை உடனடியாக விசாரணைகள் நடாத்திய பொலிஸ் உத்தியோகத்தருக்கு சுனிலினைக் குற்றஞ் சுமத்தக்கூடியதான வாய்மொழிமூலமான கூற்றொன்றினை மேற்கொண்டாள் என்பதுடன் அதற்கமைவாக சுனில் கைதும் செய்யப் பட்டான். அதனைத் தொடர்ந்து வழக்குத் தொடுநர் தரப்பிற்கு ராணி ஓர் முக்கிய சாட்சியாக இருந்தாள். விசாரணையில் சான்று வழங்குகின்ற போது தனக்கு ராணியினால் மேற்கொள்ளப்பட்ட கூற்றின் அடிப்படையிலேயே தான் செயற்பட்டதாக பொலிஸ் உத்தியோகத்தர் ஒப்புக்கொண்டார்.

பொலிஸ் உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்ட ராணியினுடைய கூற்றினை நீதிமன்றத்தில் வழங்கப்பட்டதான புலன் விசாரணை உத்தியோகத்தரின் வாக்குமூலத்தை ஒப்புறுதிப்படுத்துகின்ற சான்றின் ஓர் பகுதியாகக் கருதுவதற்கு விசாரணை நீதிபதி மறைமுகமாக யூரிமாரை அழைத்தார். யூரி குற்றத்துக்கான

தீர்ப்பை வழங்கியது. கமலைக் கொலை செய்தமைக்காக சுனிலுக்கு குற்றத் தீர்ப்பு வழங்கப்பட்டது.

1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க (திருத்தப்பட்டவாறான) குற்றவியல் நடபடிமுறைக் கோவைச் சட்டத்தில் காணப்படுகின்றதான புலன் விசாரணைகள் தொடர்பான ஏற்பாடுகள் விசாரணை நீதிபதியினால் பிழையாக ஏற்புடைமை செய்யப்பட்டுள்ளன என்ற அடிப்படையில் சுனில் மேன்முறையீடொன்றை மேற்கொள்ள விரும்புகிறான்.

தீர்க்கப்பட்ட வழக்குகளை ஆதாரமாகக் கொண்டு சுனிலுக்கு ஆலோசனை வழங்குக.

<u>**அல்லது**</u>

**(ஆ)** "வெறுமனே ஓர் ஒழுங்கீனம் என்பது நீதியின் சிதைவுக்கு காரணமாக அமையலாம் அல்லது இல்லாமலிருக்கலாம், ஆனால் முழுமையாக ஓர் குற்றச்சாட்டு இல்லாமலிருத்தல் என்பது வித்தியாசமான அடிப்படையில் நோக்கப்படுகின்றது என்பதுடன், அத்தகைய குறைபாடானது நல்ல கொள்கைக் காரணத்தின் விளைவாக தவறான விசாரணை என்ற விதத்தில் நீதியைச் சிதைப்பதற்கும் காரணமாகும் எனத் தோன்றுகிறது." – *Jayaratne Banda v. Attorney-General* ([1997] 3 SLLR 211).

1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க (திருத்தப்பட்டவாறான) குற்றவியல் நடபடிமுறைக் கோவைச் சட்டத்தின் கீழ் குற்றச்சாட்டுக்களைக் கட்டமைத்தல் தொடர்பான பொருத்தமான ஏற்பாடுகளின் பின்னணியில் மேற்போந்த கூற்றினை ஆராய்க. உமது விடையினை தீர்ப்புச் சட்ட அதிகாரத்துடன் ஆதாரப்படுத்துக.

*****

**UNIVERSITY OF COLOMBO, SRI LANKA**
**FACULTY OF LAW**
**BACHELOR OF LAWS EXAMINATION**
**YEAR III (Online) 2020**
**LAW OF EVIDENCE AND PROCEDURE**
(Three Hours)

Total Number of Questions: 06

Answer any **three** questions and **no more**.

(Candidates will be penalised for illegible handwriting.)

---

1. Narmada, who was engaged to Yoshan was missing for 2 days, and her body was found on 7 January 2020 in a lake in Habarana close to her workplace. The police found trampled shrubbery, footprints and tyre marks of a vehicle near the crime scene. Narmada was last seen on 5 January by her colleagues, getting into the car of Shaven, with whom she allegedly had an affair. According to Kavesh, a colleague of Naramada, on 2 January, Yoshan had threatened Narmada saying, 'I will finish you and finish myself if you don't stop seeing Shaven'. When the police arrived at Yoshan's house in Matara on 11 January, Yoshan allegedly attempted to run away to avoid being arrested. According Yoshan, he was working in Mattala airport between 4 – 8 January. According to Kavesh, Naramada has previously attempted to commit suicide by making herself drowned in the lake.

   If Yoshan to be indicted for Naramada's murder, what facts can be considered as relevant inculpating or exculpating evidence? Support your answer with relevant provisions in the Evidence Ordinance No. 14 of 1895 (as amended) and decided cases.

2. Richard has been arrested under the Prevention of Terrorism Act No. 48 of 1978 for conspiring to plant a bomb in a police station. Jose has been arrested for a murder. Both Richard and Jose were moved to a remand cell where Reverend Matthew was held. After being acquainted with the two inmates, Rev. Matthew has allegedly said, 'repent now and confess to find

your eternal freedom'. Subsequently, both Richard and Jose have admitted guilt to Rev. Matthew for the offences they had allegedly committed. On the same day both Richard and Jose were taken to Antony, a Superintendent of Police where Richard and Jose repeated what they have told to Rev. Matthew. As a result of Jose's statement, the police found a gun which had been allegedly used as the murder weapon. Two days later, Richard and Jose were produced before the Magistrate and the Magistrate recorded two separate statements.

Referring to relevant case law and Sri Lankan legislation, discuss the admissibility of the aforementioned materials of evidence against Richard and Jose.

3.

a) Nirmala was found with severe burn injuries by her neighbour, Subhashini in the house where Nirmala lived with her husband Suresh, her mother-in-law Kamala and Suresh's younger brother Kumar. When Subhashini asked what happened, Nirmala replied, 'they were trying to kill me' and later Nirmala became unconscious. Since no one else to be found in the house, Subhashini took Nirmala to the hospital with the help of several neighbours. At the hospital, Nirmala regained her consciousness and told her sister Sulochana, 'they set me on fire'. Hearing this, Sulochana advised Nirmala, 'tell the doctors that it was an accident. Otherwise they will ask us to take you to the big hospital. It is too far'. Then Nirmala told Doctor Niranjan, 'I was lighting the stove. My dress caught fire'. On the next day, Sharmalee, a female police officer interviewed Nirmala to whom Nirmala replied 'Kumar pushed me to the floor. That evil woman poured oil over me. Suresh set me on fire'. Several hours later Nirmala passed away.

   Can Nirmala's statements be used in murder charges against Suresh, Kumar and Kamala? Support your answer with relevant provisions in the Evidence Ordinance No. 14 of 1895 (as amended) and decided cases.

b) A presumption is not in itself evidence but only makes a *prima facie* case for the party in whose favour it exists; thus it relieves the initial burden of proof.

   Discuss briefly how the principle operates under the Evidence Ordinance No. 14 of 1895 (as amended). Support your answer with decided cases.

4.

a) "An accused who 'puts his character in issue' must be regarded as putting the whole of his past record in issue. He cannot assert his good conduct in certain respects without exposing himself to inquiry about the rest of his record so far as this tends to disprove a claim for good character" - *Stirland v. Director of Public Prosecutions* ([1944] 2 AII ER 13).

With the support of relevant decided cases and legislation briefly discuss the admissibility of character evidence in relation to criminal cases in Sri Lanka.

b) "The court should, therefore, call upon the expert to explain the reasons for his opinion and then form its own opinion as to whether or not the expert opinion is satisfactory. The court should not surrender its own opinion to that of the expert."

In light of the above statement, discuss the evidentiary value of expert evidence in judicial proceedings in Sri Lanka.

5. It is observed that the adoption of Bail Act, No. 30 of 1997 has effectively reduced the discretionary power of judges in granting bail to any person facing an inquiry or trial. This observation is influenced by the fact that there are contradictory views expressed by appellate courts as to the proper application of the relevant provisions of the Code of Criminal Procedure Act, No. 15 of 1979 (as amended) and the Bail Act.

Do you agree? Give reasons for your answer and support it with case law authority.

6. Answer either **<u>A</u> OR <u>B</u>:**

**A)** Sunil was charged with the murder of Kamal by shooting him from a moving car in which the accused was travelling. Rani, the eye-witness to the crime made an oral statement to the police officer who conducted the inquiries immediately after the alleged murder inculpating Sunil and accordingly Sunil was arrested. Rani subsequently became a key witness for the prosecution. When giving evidence at the trial, the police officer admitted that he acted on the basis of the statement made to him by Rani.

The trial judge indirectly invited the jury to consider Rani's statement given to the police as a piece of evidence which corroborates the investigating officer's testimony in court. The jury returned the verdict of guilty. Sunil was convicted for murder of Kamal.

Sunil wants to make an appeal on the basis that the provisions of the Code of Criminal Procedure Act, No.15 of 1979 (as amended) relating to investigations were wrongly applied by the trial judge.

Advise Sunil with the support of decided cases.

**OR**

**B)** "A mere irregularity may or may not result in a miscarriage of justice, but a fundamental defect such as the complete absence of a charge is placed on a different footing, such a defect is deemed to cause a miscarriage of justice in the sense of mistrial due to sound reason of policy" – *Jayaratne Banda v. Attorney-General* ([1997] 3 SLLR 211).

Discuss the above statement in light of the relevant provisions relating to framing charges under the Code of Criminal Procedure Act, No. 15 of 1979 (as amended). Support you answer with case law authority.

************************